## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2015

-----------------------------------------------------------------------

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

2001 ஆம் ஆண்டின் பின்னர் காணி மற்றும் கட்டிடங்களுக்காக மீள் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய ஓய்வூதியப் பணிக்கொடை நிதி சரியாகக் கணிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாகச் செலுத்தவேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடை ரூபா 134,944 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வினைத்திறன் போட்டிக்காக கிடைத்த வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,204,863 தொகை தீர்த்து வைக்கப்படாமல் தொடர்ச்சியாக அட்டுறு செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,899,780 கூட்டுப்பெறுமதியான பெறவேண்டிய பாடநெறிக் கட்டணங்களில் வருடமொன்றை விஞ்சிய ரூபா 1,040,665 பெறுமதியான 33 மீதிகளையும், 05 வருடங்களை விஞ்சிய ரூபா 111,372 பெறுமதியான 5 மீதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) ரூபா 1,345,222 கூட்டுப்பெறுமதியான வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெறவேண்டிய மீதியில் 5 வருடங்களை விஞ்சிய ரூபா 493,635 மீதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(இ) முகாமைத்துவ சபையின் அங்கத்தவரொருவருக்கு 2012 ஒக்தோபர் 28 முதல் நவம்பர் 04 வரை வெளிநாடு சென்றதற்காக நிறுவனத்தால் செலவிடப்பட்ட ரூபா 160,754 தொகையொன்று கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைக்கவேண்டிய பெறுமதி சேர்வரித் தொகை மீதியான ரூபா 34,454,406 தொகை பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணக் கிடைப்பனவு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப அதிகாரச்சட்டம் | |
| 47 ஆம் பிரிவு | நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட திகதி முதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தவேண்டிய பங்களிப்புப் பணம் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | |
| 44 ஆம் பிரிவு | நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட திகதி முதல் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தவேண்டிய பங்களிப்புப் பணம் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | மாணவர் விடுதியில் 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 880 | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பிரிவு | | நிதி அமைச்சரினதும் விடயப்பொறுப்பு அமைச்சரினதும் அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 05 மில்லியன் தொகையொன்று முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

### 2.2.5 போதியளவான அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

2012 சனவரி 22 ஆந் திகதி முதல் 2015 சனவரி 03 ஆந் திகதி வரை 59 சந்தர்ப்பங்களின் போது கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி கடமைகளின் வடிவிலில்லாத பிரயாணங்களுக்காக 14644 கிலோ மீற்றர் நிறுவகத்தின் பேரூந்து வண்டி பிரயாணத்தில் ஈடுபட்டதற்காக ரூபா 1,146,038 தொகையொன்று நிறுவகத்திற்குக் கிடைக்கவேண்டியிருந்ததுடன் அந்தத் தொகையை அறவிடுவதற்கு 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,156,557 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,786,120 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,942,677 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,232,437 இனால் அதிகாத்தமை மற்றும் போக்குவரத்து, பராமரிப்புச் செலவினம் ரூபா 2,331,146 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான பற்றாக்குறையும் 2015 ஆம் ஆண்டில் அதிகரிப்பும் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்வற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, 2011 ஆம் ஆண்டில் ரூபா 26,548,041 தொகையான பங்களிப்பு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 19,524,394 வரை குறைவடைந்திருந்த

போதிலும் அதன் பின்னரான ஆண்டுகளில் சீராக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 55,241,605 ஆக இருந்தது.

## 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறிக் குடியேறல், சேவையினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நட்டஈடு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நிறுவகத்திற்கு எதிராக நீதி மன்றங்களில் 07 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் இரண்டு வழக்குகளுக்குரியதாக ரூபா 379,673 நட்டஈடு கோரப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தினால் அரசாங்க வீடொன்றில் குடியிருந்ததற்காக கிடைக்க வேண்டிய ரூபா 425,406 தொகையான நிலுவை வாடகை மற்றும் அதற்குரிய வட்டி என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக நட்டஈடு கோரி வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்குதல்.

(ii) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல்

(iii) முகாமைத்துவ திறனுக்கு அவசியமான கூட்டுறவு முயற்சிகளைப் பொறுப்பேற்று முகாமைசெய்தல்.

(iv) கூட்டுறவு முயற்சிகளுக்கு தொழில்ரீதியான ஆலோசனை வழங்குதல்.

(v) மாதிரி கூட்டுறவு கிராமம், மாதிரி கூட்டுறவு வியாபார நிலையங்களைத் தாபித்தல்.

நிறுவனங்களை கூட்டிணைத்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த மேலே காண்பிக்கப்படுகின்ற பிரதான பணிகள் போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பாடநெறிகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டின் போது வெளிவாரி பட்டம் மற்றும் 11 தொழில்சார் உதவியளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தும் இந்த ஆண்டின் போது அப்பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் டிப்ளோமா பாடநெறி, சான்றிதழ் பத்திர பாடநெறி மற்றும் குறுங்கால பாடநெறிகளை நடாத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iii) இந்த நிறுவகத்தில் உள்ள வளங்களை உச்ச அளவில் செயற்திறனானதாகவும் வினைத்திறனானதாகவும் பயன்படுத்தி கற்கை மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் அதற்குரிய வசதிகளை வழங்குதல் நிறுவகத்தின் முதன்மை பணியாக இருந்த போதிலும், பாடநெறிகளை நடாத்தும் செயல்முன்னேற்றம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 7 விடயங்களுக்கான பாடநெறிகளுக்காக 58 பாடநெறிகளுக்கு 1450 பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 41 பாடநெறிகளுக்காக 992 பயிலுனர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டமையினால் இலக்கினை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் நிறுவனத்தின் குறுங்கால பயிற்சி பாடநெறிகளிலிருந்தும், தொழிற்பயிற்சி பாடநெறிகளிலிருந்தும் இலக்கிடப்பட்ட வருமானத்தை ஒப்பிடும் போது உள்ளபடியான வருமானம் முறையே ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 2,243,890 தொகை குறைவாகவும், மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட பாதீட்டின் பிரகாரம் ரூபா 1,116,000 குறைவாகவும் காணப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் விரிவுரையாளர்களின் எதிர்பார்த்த விரிவுரைகள் மற்றும் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான பொது நேர அட்டவணை மாதாந்தம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் விரிவுரைகளுக்காக சமூகமளித்தமையை உறுதிப்படுத்தும் வருகைப் பதிவேடுகளில் நேரம் மற்றும் கையொப்பம் இடப்பட்டு விரிவுரைகள் உரிய பிரகாரம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் 463 பயிற்சி பெறுநனர்களுக்காக நடாத்தப்பட்ட 13 பாடநெறிகளின் பெறுபேறுகள் 2016 மே 06 வரையிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலான கால எல்லையில் வெளியிடப்பட்ட பெறுபெறுகளை பகுப்பாய்வு செய்தபோது 12 பாடநெறிகளுக்காக தோற்றிய மாணவர்களில் சித்தியடைந்த சதவீதம் 9 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் 08 செயற்திட்டங்களுக்காகக் கிடைத்த ரூபா 75,445,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 20,000,000 கடன் மீளச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 55,445,000 தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்ட செயற்திட்டங்களில் ஈடுபடுத்தப்படாமல் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தினால் ரூபா 238,855 தொகையொன்று ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாமல் 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

**ரத்னாயக்க மண்டபம், டீ மற்றும் ஜீ விடுதிகள், தலைவரின் அறை நவீனமயப்படுத்தல் பரீட்சிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுப்பெறுமதி ரூபா 19,414,918 தொகையான 04 ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது பெறுகைகள் சபையின் அங்கீகாரமின்றி வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரி 2 நிறுவனங்களின் கூறுவிலைகள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு நிறுவகத்தின் முகாமைத்துவ சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2015 நவம்பர் 30 இல் உள்ளவாறு ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த 4 செயற்திட்டங்களுக்கான ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி ரூபா 14,441,937 தொகையான புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சபை தீர்மானங்களின் பிரகாரம் விரிவுரையாளரொருவர் மாதாந்தம் வேலை செய்யக்கூடிய ஆகக் குறைந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை 60 மணித்தியாலமாக இருக்க வேண்டிய போதிலும், 06 விரிவுரையாளர்களினால் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1743 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டில் 2577 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரை நடாத்தப்பட்டிருந்தது. உள்ளக விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 2577 மணித்தியாலங்களினால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் போது, வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெறப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 3,483,900 வெளிவாரி வளப் பங்களிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிரந்தர விரிவுரையாளர் பதவியணிக்காக மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,779,312 தொகையும், வினாப்பத்திரம் தயாரித்தல், விடைப்பத்திரம் மதிப்பீடு செய்தல் விதிகள் தயாரித்தல், பாடநெறி இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் திறன் மதிப்பீட்டுக் கட்டணமாக ரூபா 900,846 படியும் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்த சம்பளம் விரிவுரை நடாத்துவதற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான 6 செலவின விடயங்களுக்குரிய செலவின நிதி ஏற்பாடுகளிலிருந்து 28 சதவீதம் முதல் 55 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்ததுடன், 3 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து ரூபா 1,557,974 செலவிடப்பட்டிருந்தது. வெளிநாட்டுப் பாடநெறிக் கட்டண வருமானமாக ரூபா 1,260,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்ததுடன், ஐந்து வருமான விடயங்களுக்காக குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது, மேலும் ஆறு வருமான விடயங்களை உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்தி

முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதும், பொருள் மெய்மையாய்வு குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு நடாத்துதல், கலையரங்கத்திலிருந்து அகற்றுவதற்கு ஏற்பட்ட ரூபா 4,107,280 கிரயமான பொருட்கள் சுயாதீன மதிப்பீட்டாளரின் அறிக்கையின்றி கைதவிர்த்தல், நிறுவகத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சரின் பிரத்தியோக பதவியணியிக்கு வழங்கியமை தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | வருடாந்த பொருள் மெய்மையாய்வு குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு நடாத்தப்படாமை மற்றும் பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | செலவினங்களைக் கணக்கீடு செய்தல் மற்றும் நிதி ஏற்பாட்டை ஒதுக்குதல் சரியாக மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற மீதிகள் தீர்க்கப்படாமை மற்றும் மீதி உறுதிப்படுத்தல் பெறப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | வாகனப் பயன்பாடு | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை, வாகன இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | நிதிக்கட்டுப்பாடு | அங்கீகாரமின்றி நிலையான வைப்புக்களில் நிதி முதலீடு செய்தல் மற்றும் கவனத்தில் கொள்ளக்கூடிய பணம் போதியளவில் நடைமுறைக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டமை. |
| (ஊ) | மனிதவள முகாமைத்துவம் | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை, உள்ளக விரிவுரையாளர்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் போது வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டமை. |